காரணத்தால், ரூ. 4 கோடி அளவில், ஒரு திட்டம் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினால் தயாரிக்கப்பட்டு வருகிறது என்கிற நல்ல செய்தியினை, அந்தத் தொகுதியின் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. த. வேணுகோபால்; துணைத் தலைவர் அவர்களே அமைச்சர் அவர்கள் பெண்ணை ஆற்றிலிருந்து திருவண்ணாமலைக்கு குடிநீர் கொண்டுவரும் பிரச்னையைப் பற்றி கூறும் போது, அங்கே அதற்காக ஜெனரேட்டர் வாங்கப்போவதாக கூறினார்கள். அந்தப் பணி உடனடியாக செய்து முடிக்கப்படும் என்றும் கூறினார்கள். அந்த ஜெனரேட்டரின் மதிப்பீடு எவ்வளவு? எப்பொழுது இது வாங்கி வைக்கப்படும் என்று அறிவிப்பாரா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: துணைத் தலைவர் அவர்களே, ஜெனரேட்டர் வாங்கப்படுவாக நான் சொல்லவில்லை. ஃபீடர் லைன் போட்டு சுமார் 1½ இலட்சம் ரூபாய் செலவில் உடனடியாக குடிநீர் கொடுக்க ஒரு ஏற்பாடு செய்யப்படும் என்று சொன்னேன்.

தென்மாநில நதிகளை இணைக்கும் திட்டம்

* வினா எண் 34—திரு. செ. செம்மலை: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்மாநில நதிகளை இணைக்கும் முயற்சிக்கு விவரங்கள் திரட்ட மத்திய அரசு ஏதேனும் குழுவை அனுப்பியிருக்கிறதா?

(ஆ) மத்திய அரசு மாநில அரசை அது பற்றிய விவரங்களைக் கேட்டு எழுதியுள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: (அ) இல்லை.

(ஆ) ஆம். மத்திய அரசு கேட்ட விவரங்கள் யாவற்றையும், தமிழக அரசு மத்திய அரசுக்கு அனுப்பியுள்ளது.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென் மத்திய நதிகளான காவிரி, பெண்ணை, வைகை, தாமிரபரணி, இவைகளையெல்லாம் இணைக்கிற ஒரு திட்டத்திற்கு நமது அரசாங்கம் ஏதாவது ஆலோசனை நடத்தியதா? அதன் செயற்குறிப்பு எந்த அளவில் ஆய்வில் இருக்கிறது? அதன் நிலை என்ன என்பதை தெரிந்துக் கொள்ளவிரும்புகிறேன். அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

1983 சனவரி 28]

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, நாட்டின் பல்வேறு பகுதிகளில் செல்லும் நதிகளில் நீரை முழுமையாகப் பயன்படுத்திக் கொள்வதற்காக, மத்திய அரசின் நதிநீர் வள ஆய்வுக்குழு ஒன்று ஆய்வு செய்து வருகிறது. அந்த நீர் வள குழுவினுடைய உதவியோடு இத்தகைய ஒரு திட்டத்தை அவர்கள் தயாரித்திருக்கிறார்கள். Peninsular River Perspective Plan என்று பெயர். 1980 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 18, 19, 20 ஆகிய நாட்களில் புதுடெல்லியில் நடைபெற்ற கூட்டத்தில் இது குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டு, கங்கை காவிரி இணைப்பு என்பது ஒட்டுமொத்தமாக ஒப்புக்கொள்ளப்பட சாத்தியம் இல்லை, எனவே, பென்னிசுலா ரிவர்ஸ் என்று சொல்லக்கூடிய தென்பிராந்திய நதிகளான மகாநதி, கோதாவரி கிருஷ்ணா, காவிரி, வைகை, தாமிரபரணி, நந்தியாறு என்கிற அளவில் இந்த நதிகளையெல்லாம் இணைக்கிற திட்டத்தை தயாரிப்பது உடனடியாக சாத்தியமானது, ஆகவே அதனைச் செய்யவேண்டும் என்ற அடிப்படையிலே நம்மிடத்திலே சில விவரங்களைக் கேட்டார்கள். அந்த விவரங்களை நாம் அவர்களுக்கு வழங்கியிருக்கிறோம்.

(முற்பகல்—9.40)

திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, கங்கை-காவிரி இணைப்பு சாத்தியம் இல்லை என்று கூறப்படுகின்ற நேரத்திலே பெனின்சுலா நதிகளை இணைக்கின்ற வகையிலே (பெர்ஸ்பெக்டிவ் ப்ளான்ஸ் ஆஃப் தி பெனின்சுலா ரிவர்ஸ்) சொல்லப்படுகின்ற திட்டத்தின் செயற்குறிப்பிற்கு நம்முடைய அரசு அறிவுரை வழங்கி இருக்கின்றதா? அந்தத் திட்டம் எப்போது எடுத்துக்கொள்ளப்படும்? அதனுடைய விவரங்கள் யாவை என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜாமுகமது: இது சம்பந்தப்பட்ட தென் மாநிலங்கள் எல்லாம் மத்திய அரசோடு குறிப்பாக மத்திய நீர்வளக் குழுவினுடைய சில கைட் லைன்ஸைப் பின்பற்றி செயற்குறிப்புகளை அனுப்பி இருக்கிறார்கள். அதிலே முக்கியமான ஒன்று என்னவென்றால் எந்த இடத்திலே 10 இலட்சம் எக்கர் அளவிலே நிலத்திலே நீரைத் தேக்க முடியுமோ அதாவது 43500 கன அடி கொள்ளளவு உள்ள நீர்த்தேக்கத்தை எங்கெங்கே அமைக்க முடியுமோ அவற்றை உடனடியாக பரிசீலனைக்கு எடுத்து ஆய்வு செய்து திட்டங்களைத் தயாரிக்கவேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். ஆனால் தமிழகத்தைப் பொறுத்தவரையில் அவ்வளவு பெரிய நீர்த் தேக்கம் இல்லை. மேலும் அப்படி 43500 கன அடி கொள்ளளவு உள்ள நீர்த்தேக்கத்தை அமைக்க முடியுமா என்றால் முடியாது. எனவே மகாநதி, கிருஷ்ணா, கோதாவரி ஆகியவற்றின் உபரி நீர் தமிழகத்திற்கு வருவதற்கு ஏற்பாடு செய்தால் அதற்கான செலவுகளைப் பொறுத்தவரையில் தமிழக அரசு எந்த விகிதாச்சாரத்தில் ஏற்றுக்கொள்ளவேண்டுமோ அந்த அளவுக்குக் கொடுக்கத் தயாராக இருக்கின்றது என்று நாம் குறிப்புகளை வழங்க இருக்கிறோம்.

[1983 சனவரி 28

திரு. ந. சிவஞானம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு மகாநதியையும், தாமிரபரணியையும் இணைக்க இருப்பதாக சொல்லப்படுவது சம்பந்தமாக மாநில அரசுக்கு தகவல் ஏதும் வந்ததா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னது தான். மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, காவிரி, வைகை ஆகியவற்றை இணைப்பதன் மூலம் வைகையிலே சர்ப்ளஸ் வாட்டர் வந்தால் அதனைத் தாமிரபரணி, நம்பியாறு போன்ற பகுதிகளுக்கு வருகின்ற வகையிலே அதாவது அந்த வகையிலே அவற்றையும் இணைக்கின்ற வகையிலே தமிழக அரசு அடுத்த படியாகஒரு இணையான யோசனையும் கொடுத்து அதுவும் பரிசீலனையில் இருக்கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேசிய நீர்வள அபிவிருத்தி ஏஜென்சி மகாநதி, கிருஷ்ணா, கோதாவரி மற்றும் அதற்குத் தெற்கே இருக்கின்ற காவிரி, வைகை தாமிரபரணி, நம்பியாறு ஆகியவற்றை இணைப்பது என்பது கங்கை—காவிரி இணைப்புக்கு ஒரு முதல் அடிப்படைதானே தவிர கங்கை—காவிரி இணைப்பு அல்ல என்றும் கங்கை—கன்னியாகுமரியினை இணைப்பது சாத்தியம் அல்ல என்று சொல்வதைப் பற்றியும் போஸ்ட் எஸ்டேட் ஸ்பிக்ஸ் என்ற தலைப்பில் தி இன்டியா ஆப் அவர் ட்ரீம்ஸ் என்ற புத்தகம் விரிவாகப் பேசுகின்றது. ஆகவே கங்கை—கன்னியாகுமரி இணைக்கக்கூடியதுதான் என்று சொல்வது அமைச்சரின் கவனத்திற்கு வந்துள்ளதா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: துணைத் தலைவர் அவர்களே, தேசிய நலனை முன்னிட்டு ஒருமைப்பாட்டின் அடிப்படையில் உணர்வுபூர்வமாக கங்கை—காவிரியை இணைக்கலாம் என்று சொல்கிறோம். ஆனால் நீர் வளத்தின் மூலமாக இணைக்கின்ற சாத்தியம் கிடையாது. இது ஒருதட்டவட்டமான கொள்கை. ஆனால் அறிவாளிகள் பலபேர் இருக்கிறார்கள். அவர்களில் ஒருவர் விந்திய மலைக்குத் தெற்கே நீர் எற்று பம்பின் மூலமாக நீரை ஏற்றி மலைகளுக்குக் கொண்டு வந்து சேர்த்து அதன்பின் கொண்டு வந்து இணைக்கலாம் என்று எழுதி இருக்கலாம். நீரை மேலே ஏற்றிக் கொண்டு வருவதுதான் வலிய பிரச்சினை. ஆனால் அதற்காகத் திட்டம் கைவிடப்பட்டதாக அர்த்தம் இல்லை. இமாலயத் திட்டமாக தனியாக எடுத்துக் கொண்டு கங்கையினை வட மாநிலங்களோடு இணைப்பது என்பது ஒரு திட்டம். ஆனால் மகாநதியோடு நான் குறிப்பிட்ட

1983 சனவரி 281

மற்ற நதிகளை இணைப்பது என்றும் அவ்வாறு இணைத்து இங்கே தண்ணீரைக் கொண்டுவருவது என்பதுதான் இப்போது சாத்தியமானது. ஆனால் அணு யுகத்தில் சாத்தியமல்ல என்று எதையும் கூற முடியாது. பணவசதி இல்லை என்பதுதான் அடிப்படைக் காரணம்.

சிங்கம்புணரியில் இயங்கிடும் பெரியாறு மேம்பாட்டுத் திட்டம்.

*வினா எண் 35 திரு. இரா. அருணகிரி: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்கம்புணரியில் உலக வங்கி உதவியுடன் இயங்கும் பெரியார் மேம்பாட்டுத் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு கே. இராஜாமுகமது .

(அ) அண்டு (ஆ) பெரியாறு மேம்பாட்டுத் திட்டத்தில் புலிப்பட்டி மதகுக்குக் கீழே சிங்கம்புணரி பகுதியில் விரிவாக்கக் கால்வாய் வெட்டப்பட்டு வருகிறது. இவ்வேலைகள் 1981—டிசம்பர் திங்களில் ஆரம்பிக்கப்பட்டு முன்னேற்றமடைந்து வருகின்றன.

திரு. இரா. அருணகிரி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு இதுவரை எவ்வளவு செலவிடப்பட்டிருக்கின்றது. இதன்மூலம் பஞ்ச நிலங்களுக்கு பாசனம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு கே. இராஜாமுகமது. பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 31—3—1982 முடிய இவ்வேலைக்காக 53.05 இலட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கின்றது. ஒட்டு மொத்தமாக இந்தப் பகுதியினுடைய வேலைக்காக கிட்டத்தட்ட 10 கோடி ரூபாய் என்ற அளவிலே அரசு நிதி ஒதுக்கிடு செய்து இந்த நவீனப்படுத்துகின்ற வேலை முனைப்போடு செய்யப்பட்டு வருகின்றது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரடியாக எந்தெந்தப் பகுதிகள் என்று கேட்கவில்லை. அவர்களுடைய தொகுதியிலேயும் புதிய பகுதிகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

திரு. இரா, அருணகிரி. மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதற்காக ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்கள் எவ்வளவு? எவ்வளவு பணம் கொடுக்கப்பட்டிருக்கிறது? ஏக்கருக்கு எவ்வளவு என்று நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்?